இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்களது இல்லத்திற்கு நேரில் சென்று உடல் நலம் விசாரித்தார். அருகில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா மற்றும் அவர்களது குடும்பத்தினர் உள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் கோடை விழா மற்றும் 60வது மலர் கண்காட்சியை பிரையண்ட் பூங்காவில், அமைச்சர் பெருமக்கள் ஐ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கா.ராமச்சந்திரன் மற்றும் ஆர்.சக்கரபாணி ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மற்றும் கரூர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி.வேலுச்சாமி, திருமதி.ஜோதிமணி, பழனி மற்றும் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர்கள் ஐ.பி.செந்தில்குமார், எஸ்.காந்திராஜன், அரசு துறை செயலாளர், இயக்குனர், அரசு துறை அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

2006 தொடங்கி இன்று வரை - நானோ, குடும்பத்தினரோ

ஒரு சதுர அடி நிலத்தைக் கூட கூடுதலாக வாங்கவில்லை!

அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டி!

சென்னை, மே 28 -

எனது வீட்டில் வருமான வரித்துறை சோதனை நடக்கவில்லை என்று அமைச்சர் செந்தில் பாலாஜி கூறினார். தமிழ்நாடு முழுவதும் அரசு ஒப்பந்ததாரர்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். டாஸ்மாக் மற்றும் மின்துறை ஒப்பந்ததாரர்கள் வீடுகளில் வருமான வரித்துறை சோதனை நடத்தி வருகின்றனர். சென்னை, கரூர், கோவை உள்ளிட்ட 100 இடங்களில் இந்த சோதனை நடந்து வருகிறது. இந்த சோதனைக்கான காரணம் வெளியாகவில்லை. காலை 7 மணி முதல் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், வருமான வரிச் சோதனை குறித்து அமைச்சர் செந்தில் பாலாஜி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

வருமானவரித்துறை சோதனை எனது சகோதரர் இல்லம், நண்பர்கள், உறவினர்கள், எங்களுடைய நண்பர்கள், உறவினர்கள் என பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக இன்று காலை சில தொலைக்காட்சிகளும், சில பத்திரிக்கைகளில், சமூக வலைதளங்களில் வெளியிட்டதை போல எனது இல்லத்தில் இது போன்ற சோதனைகள் எதுவும் நடைபெறவில்லை என்று முதலில் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நடைபெற்றாலும் அதை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்கிறோம்.

இந்த பேட்டியை கொடுப்பதற்கு முன்பதாக திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக இன்று நடைபெறுகிற இந்த சோதனை குறித்து கழகத்தினுடைய அமைப்பு செயலாளர் போற்றுதலுக்குரிய ஆர்.எஸ்.பாரதி முதல மைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மிக தெளிவான விளக்கங்களை சற்றுமுன் அளித்திருக்கின்றார்கள். எனவே இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அதுநடைபெற்ற சில விரும்பத்தகாத செயல்கள் குறித்தும் எதனால் அது ஏற்பட்டது என்பது குறித்தும் ஆர்.எஸ். பாரதி மிக தெளிவாக விளக்கங்களை தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே இந்த சோதனை என்பது புதிதாக நாங்கள் எதிர்கொள்வது அல்ல. ஏற்கனவே சட்டமன்ற தேர்தலுக்கு இறுதி பிரசாரத்திற்கு முன்பாக இதுபோன்ற வருமான வரிசோதனைகளை எதிர்கொண்டோம். தேர்தலுக்கு பிரச்சாரம் இறுதியில் நெருங்குகின்ற நாட்களில் அவசியம் நேரில் வரவேண்டும் என்று அறிவுறுத்தினார்கள், கட்டாயப்படுத்தினார்கள் அப்போது கூட சொன்னோம் வாக்கு பதிவுக்கு முன்பதாக எங்களை வரவழைத்து சோதனை என்ற பெயரில் இறுதிகட்ட பிரச்சாரத்தை முன்னேடுப்பதற்கு தடை செய்வதற்கு முயற்சியாக இருக்கும் என்று பிரச்சாரம் முடியட்டும் அதற்கு முன்பாக நீங்கள் எந்த நடவடிக்கைகளும் எடுங்கள் அல்லது முழுவதும் வீடுகளுக்கு சீல் வைத்தாலும் சரி அல்லது வீட்டில் எனது பெற்றோர்கள் இருக்கிறார்கள் அவர்

கள் முன்னிலையில் சோதனை செய்து முழுவதும் நீங்கள் என்ன கைபற்றினீர்களோ அவைகளை அவர்களின் கையொப்பம் பெற்று சோதனையை நிறைவு செய்யுங்கள்.

தேர்தல் முடிந்த பிறகு அதற்கான விளக்கங்களை சொல்ல நான் தயார் நிலையில் இருக்கிறேன் என்று சொன்னேன்,, இப்போது எனது இல்லம் தவிர என்னுடைய சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அவர்களுடைய நண்பர்கள், உறவினர்கள் வீடுகள் உள்ளிட்ட பல இடங்களில் சோதனைகள் நடைபெற்று வருகின்றன. இதில் என்ன சிறப்பு செய்தி என்று கேட்டால் இன்று வருமான வரித்துறை சோதனை நடத்துகின்ற பெரும்பாலான இடங்கள், ஏற்கனவே வருமான வரி செலுத்த கூடியவர்கள், வருமான வரியை யாரும் ஏமாற்ற கூடிய வர்கள் அல்ல இன்று சோதனை நடைபெற்று கொண்டு இருக்கிறது குறிப்பாக அந்த விரும்பக் கூடாத சம்பவங்களை தொடர்ந்து உடனடியாக நான் அவர்களுக்கு தொடர்புகொண்டு நிர்வாக பெருமக்கள் சோதனை நடைபெறுகின்ற இடங்களில் இருக்கக் கூடாது முழு ஒத்துழைப்பை சோதனைக்கு வந்திருக்கிறவர்களுக்கு தருமாறு சொல்லியிருக்கிறேன். சொன்ன உடனே அங்கிருந்து களைந்து சென்று இருக்கிறார்கள். எத்தனை இடங்களில் நடைபெற்றாலும் அவர்கள் கேட்கின்ற ஆவணங்களை வழங்குவதற்கு தயாராகதான் இருக்கின்றோம். எவ்வளவு நாட்கள் நடத்தினாலும் முழு ஒத்துழைப்பை வழங்கிட தயார் நிலையில்தான் இருக்கின்றோம். இதில் எந்த விதமாற்று கருத்தும் இல்லை, இதை தெளிவாக சொல்ல வேண்டும் என்றால் இந்த சோதனை முழுவதுமாக நிறைவு பெற்ற பின்பு என்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கிறது, என்ன என்ன கைப்பற்றப்பட்டிருக்கிறது, என்ன கருத்துக்களை அவர்கள் முன் வைக்கிறார்கள் என்பதை முழுவதுமாக தெரிந்துகொண்டு அதன் பிறகு நான் என் கருத்துக்களை பகிர்ந்துகொள்ள சரியாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். ஆகையால் முழு சோதனை முடிந்த பிறகு நான் மீண்டும் உங்களை சந்திக்கின்றேன்.

1996 ஆம் ஆண்டு முதன் முறையாக சுயேச்சையாக நின்று ஒன்றியக்குழு உறுப்பினராக வெற்றிபெற்றேன். அன்று தொடர்ந்து இன்று வரை 26 ஆண்டுகாலம் பொதுவாழ்வில், குறிப்பாக கரூர் மக்கள் தொடர்ச்சியாக என்னை வெற்றி பெறச்செய்து மக்கள் பணி ஆற்றக் கூடிய வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள். உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய குறிப்பாக இந்தியாவில் இருக்கக்கூடிய முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக சிறந்த ஆட்சியை நடத்தக் கூடிய தமிழகத்தின் ஒப்பற்ற முதலமைச்சர் தளபதி அவர்கள் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடக் கூடிய வாய்ப்பை அரவக்குறிச்சியில் வழங்கி அதன் தொடர்ச்சியாக கரூரிலும் போட்டியிடக் கூடிய வாய்ப்பை வழங்கி தேர்தல் பிரச்சாரம் செய்து வெற்றி பெறச்செய்து அமைச்சரவையிலும் பணியாற்றக் கூடிய ஒரு வாய்ப்பை வழங்கி இருக்கின்றார்கள். எனவே, மக்கள் அங்கீகரிக்கக்கூடிய எங்களுடைய தலைமை எங்களுடைய கழகத் தலைவர் முதலமைச்சர் மிகப்பெரிய அங்கீகாரத்தை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். ஆகையால், வருமான வரித்துறை சோதனை என்ற பெயரில் ஏதாவது தவறு இழைத்திருந்தால் அல்லது வரி ஏய்ப்பு செய்திருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம் அதில் எந்த விதமான மாற்றுக் கருத்தும் இல்லை. அதிகாலையில் காலிங்பெல் அடிக்கும் பொழுது, முகம் கழுவி துடைத்து விட்டு வந்து கதவை திறப்பதற்கு ஒரு 5 நிமிடங்களாவது ஆகும் அல்லவா அதற்குள்ளாகவே சுவர் ஏறி குதித்து உள்ளே நுழைந்தால் எப்படி?

நிர்வாக தரப்பினருடன் சில விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது. உடனடியாக நிர்வாகப் பெருமக்களை கலைந்து செல்ல அறிவுறுத்தியதின் பேரில் புறப்பட்டுச் சென்று விட்டார்கள். இன்னொரு கருத்தையும் நான் முன் வைக்க விரும்புகிறேன். 2006 சட்டமன்றத்தினுடைய முதல் தேர்தலில் என்னதாக்கல்செய்தேனோ அதன் பிறகு இன்று வரை ஒரு சொத்து என் பெயரில் இருந்து பத்திர அலுவலகம் சென்று கையொப்பமிட்டு நான் விற்பனை செய்திருக்கின்றேன். 2006 முதல் இன்று வரை நானோ என் குடும்ப உறுப்பினர்களோ, என் பெற்றோர்களோ என் சகோதரர் பெயரிலோ எந்த சொத்தும் புதிதாக பதிவு செய்யவில்லை. வாங்கவும் இல்லை. மக்கள் கொடுக்கும் அங்கீகாரமே போதுமானது. அதுபோன்ற நடவடிக்கைகளில் எப்போதும் ஈடுபட மாட்டோம். சில வாரங்களுக்கு முன்பாக என்னுடைய சகோதரர் இல்லம் குறித்து ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக ஒரு உண்மையை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்கிறேன். என்னுடைய தம்பி மனைவியினுடைய தாயார் அவர்கள் தங்களுடைய சொத்துக்களை, தன்னுடைய கணவர் இறந்த பிறகு, தன்னுடைய மகள்களுக்கு தானமாக கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு தம்பி மனைவிக்கு அவருடைய தாயார் அளித்த இடம் தான் தற்போது வீடு கட்டுவதாக கூறப்படும் இடம். அதன் உண்மைத் தன்மை என தெரிந்து கொள்ளாமல் சிலர் சமூக வலை தளங்களில் பதிவிட்டார்கள். 2006 முதல் இன்று வரை நானோ என் குடும்ப உறுப்பினர்களோ எந்த புதிய சொத்தும் வாங்கவில்லை. வாங்கவும் மாட்டோம்.

இருக்கின்ற சொத்துக்களே எங்களுக்கு போதுமானது. மக்கள் கொடுக்கும் அங்கீகாரமே போதுமானது. எங்கள் தலைவர் முதல்வர் அவர்கள் நான் நினைத்துப் பார்க்காத அளவிற்கு மிக உயர்ந்த இடத்தைக் கொடுத்து மக்கள் பணியாற்றும் அங்கீகாரத்தை வழங்கியிருக்கின்றார்கள். என் வாழ்நாள் முழுவதும் நன்றியுணர்வோடு பணியாற்றக்கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கியிருப்பவர்களுக்கு பாதம் பணிந்து நன்றியுணர்வோடு பணியாற்றுவேன். ஏற்கனவே என் சகோதரர் உட்பட அனைவரும் அட்வான்ஸ் வரி செலுத்தக் கூடியவர்கள். இந்த வருமான வரி சோதனையில் ஏதேனும் வரி ஏய்ப்பு கண்டறிந்தால் அதனை செலுத்தவும் தயாராக உள்ளோம். இந்த வருமான வரி சோதனையைப் பொறுத்த மட்டில் எத்தனை நாட்கள் நடைபெற்றாலும் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளித்து சோதனை நிறைவில் ஏதேனும் தவறு இருப்பின் சுட்டிக்காட்டினால் அந்த தவறை சரி செய்து தருவதற்கும் தயாராக இருக்கின்றார்கள் என்று தெரிவித்தார்.

உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரம் ஏறி சாதனை படைத்த

என்.முத்தமிழ்ச் செல்விக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

கூடுதலாக ரூ. 15 லட்சம் நிதிஉதவி வழங்கினார்!

சென்னை, மே 28-

உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த தமிழ் நாட்டைச் சார்ந்த திருமதி என்.முத்தமிழ்ச்செல்விக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்.

சென்னையைச் சார்ந்த திருமதி என்.முத்தமிழ்ச் செல்வி அவர்கள் 2023ஆம் ஆண்டு "ஏசியன் டிரக்கிங் இன்டர்நேஷனல் நிறுவனம்" மூலம் நேபாளம் தலைநகர் காட்மாண்டுவில் இருந்து புறப்பட்ட குழுவினருடன் இணைந்து உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் 8,848 மீட்டர் ஏறி சாதனை செய்ய திட்டமிட்டு 02.04.2023 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு நேபாளம் சென்றார். நேபாள அரசின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்த எவரெஸ்ட் சிகரம் ஏறுதலில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து ஏராளமானோர் பங்கேற்றனர். முத்தமிழ்செல்வி அவர்கள் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை செய்ய தமிழ்நாட்

டிலிருந்து தேர்வு செய்யப்பட்ட முதல் பெண்.

இவர் 2023 ஏப்ரல் 2 ந்தேதி சென்னையிலிருந்து காட்மாண்டு சென்றார். ஏப்ரல் 5ந்தேதி கேம்பிற்கு (started to Base camp) பயணத்தை தொடங்கினார். ஏப்ரல் 19 ந்தேதி லோபுச் பகுதி உயரத்தை (20075அடி - 6119 மீட்டர் உயரம்) (LOBUCHE PEAK SUMMIT 20075 feet - 6119 meter) அடைந்தார். மே18 ந்தேதி மவுண்ட் எவரெஸ்டக்கு பயணத்தை தொடங்கினார். மே 23ந்தேதி மவுண்ட் எவரெஸ்ட் பகுதியை வெற்றிகரமாக அடைந்தார். (MOUNT EVEREST SUMMIT 29035 FEET8848.86 METER completed successfully). மே 24 ந்தேதி கேம்ப் 2 க்கு வந்து சேர்ந்தார்.

உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த முத்தமிழ்செல்வி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மேலும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மற்றும் அரசு அலுவலர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

சென்னையைச் சார்ந்த திருமதி என்.முத்தமிழ்ச் செல்வி அவர்கள் எவரெஸ்ட் சிகரம் ஏறுதலில் பங்கேற்க நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு அரசு மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களிடம் முத்தமிழ் செல்வி கோரிக்கை விடுத்திருந்தார். இதனைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் நிதியுதவியாக ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை 28/03/2023 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

இந்நிலையில் சிகரம் ஏறுவதற்கு கூடுதல் நிதியுதவி தேவைப்படுவதால் மேலும் நிதியுதவி வழங்கிடுமாறு அமைச்சர் அவர்களிடம் மீண்டும் கோரிக்கை விடுத்தார். இதனை தொடர்ந்து தன்னார்வல அமைப்புகள் மூலம் கூடுதலாக ரூபாய் 15 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்றிய அரசு

ஆவின் நிறுவனத்தை அழிக்கும் முயற்சியை விவசாயிகள் தடுத்து நிறுத்த வேண்டும்!

'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் வேண்டுகோள்!

சென்னை, மே 28-

ஒன்றிய அரசையும் அமித்ஷாவையும் திருத்த முடியாது என்றும் ஆவின் நிறுவனத்தை அழிக்கும் நோக்கில் அமுல் நிறுவனத்தை தமிழ்நாட்டிற்கு கொண்டுவரும் முயற்சியை விவசாயிகள் தடுத்து நிறுத்த வேண்டும் என 'தீக்கதிர்' நாளேடு விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்து தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

குஜராத் மாநிலத்தில் ஆனந்த் என்ற ஊரை தலைமையிடமாகக் கொண்டு ஆனந்த் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (அமுல்) தொடங்கப்பட்டு வலுவான கூட்டுறவு அமைப்பாகத் திகழ்கிறது. பால் உற்பத்தியாளர்களும் பாலை வாங்கி பயன்படுத்தும் நுகர்வோரும் பயனடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தரமான கூட்டுறவு நிறுவனமாக, இதனை இந்தியாவின் மில்க் மேன் என்று அழைக்கப்பட்ட மறைந்த வர்கீஸ் குரியன் உருவாக்கினார். அப்படிப்பட்ட அமுல் நிறுவனத்தை குஜராத் மாநிலத்தை ஆளும் பா.ஜ.க.வினர் சர்ச்சையில் சிக்க வைத்துவிட்டனர்.

பிற மாநிலங்களில் பால் உபபொருட்களை மட்டும் விற்பனை செய்து வந்த அமுல் நிறுவனம் தமிழகத்தில் தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, வேலூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் பால் கொள்முதல் செய்ய உள்ளதாக தற்போது அறிவித்துள்ளது. இது சரியான முடிவல்ல. பிற மாநிலங்களில் பால் கொள்முதல், குளிரூட்டும் நிலையம் அமைப்பது போன்ற செயல்கள் கூட்டுறவு அமைப்புகளிடையே மோதல் போக்குக்கு வழிவகுத்து விடும்.

ஒவ்வொரு மாநிலத்திலும் விவசாயிகளிடம் இருந்து பாலை கொள்முதல் செய்ய கூட்டுறவு அமைப்புகள் உள்ளன. தமிழகத்தில் ஆவின் நிறுவனம் அத்தகைய பணியில் ஈடுபட்டுள்ளது. தனியார் பாலை விட ஆவின் பால் விலை குறைவு என்பதால், பொதுமக்கள் ஆவின் பாலை விரும்பி வாங்குகின்றனர். ஆனால் பாலுக்கு கூடுதல் விலை கொடுத்து கொள்முதல் செய்வதாக தமிழக விவசாயிகளுக்கு அமுல் வலைவிரிக்கிறது. இதனால் ஆவின் நிறு

தீக்கதிர்

2023 மே 27 சனிக்கிழமை

கூட்டுறவுக்கு வேட்டு வைக்கும் ஒன்றிய அரசு

குஜராத் மாநிலத்தில் ஆனந்த் என்ற ஊரை தலைமையிடமாகக் கொண்டு ஆனந்த் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (அமுல்) தொடங்கப்பட்டு வலுவான கூட்டுறவு அமைப்பாகத் திகழ்கிறது. பால் உற்பத்தியாளர்களும் பாலை வாங்கி பயன்படுத்தும் நுகர்வோரும் பயனடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தரமான கூட்டுறவு நிறுவனமாக, இதனை இந்தியாவின் மில்க் மேன் என்று அழைக்கப்பட்ட மறைந்த

வனத்தின் பால் கொள்முதல் வெகுவாக குறைந்து மூடும் நிலைக்குத் தள்ளப்படும்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு ஒன்றிய அளவில் கூட்டுறவுத் துறைக்குத் தனியாக ஒரு கேபினட் அமைச்சராக உள்துறை அமைச்சரான அமித்ஷா நியமிக்கப்பட்டார். அவர் அந்த பொறுப்பை ஏற்ற பின் தனது மாநில கூட்டுறவு அமைப்புகளை வலுப்படுத்த பிறமாநிலங்களில் உள்ள கூட்டுறவு அமைப்புகளைச் சிதைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

கர்நாடகாவில் பால் மற்றும் பால் பொருட்களுக்கான கூட்டுறவு அமைப்பின் பெயர் நந்தினி. கர்நாடக மக்களின் உணர்வோடு கலந்த நந்தினிக்குப் போட்டியாக அம்மாநிலத்திற்குள் அமுல் தனது வர்த்தகத்தை விரிவுபடுத்த முயன்றது. இதற்கு அம்மாநில விவசாயிகள் உள்பட அனைத்து தரப்பு மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக பின்வாங்கியது. இது சமீபத்திய சட்டப்பேரவைத் தேர்தலிலும் வலுவாக எதிரொலித்தது. இதன் பின்னரும் ஒன்றிய அரசும் அமித்ஷாவும் திருந்துவதாக இல்லை. எனவே தமிழக அரசு, ஆவின் நிறுவனத்தை அழிக்கும் ஒன்றிய அரசின் முயற்சியை மாநில விவசாயிகளின் ஆதரவோடு தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை

தி.மு.க. சட்ட திட்ட திருத்தக் குழு சார்பில் சிறப்பாக கொண்டாடுவோம்!

நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மே 28-

தி.மு.க. சட்டதிட்ட திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நேற்று முன்தினம் (26.5.2023 வெள்ளிக் கிழமை) மாலை 5.00 மணி அளவில், செயலாளர் ஆர். கிரிராஜன், எம்.பி., தலைமையில், இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் மற்றும் மாநில நிர்வாகிகளான ஓரத்தநாடு இராசமாணிக்கம், தென்றல் செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:

தி.மு.க. சட்டதிட்ட திருத்தக்குழு சார்பில் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினை எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டும்.

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியனும் தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டுகால பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரும் ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டு காலப் பங்களிப்பாளரும் அரை நூற்றாண்டு காலம் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவரும் களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளரும் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவரும் இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவரும் இலக்கியம் - கவிதை - இதழியல் - நாடகம் - திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளரும் - தான் ஆட்சிக் கட்டிலில் முதலமைச்சராக அமர்ந்த போதெல்லாம் தமிழ்நாட்டு விவசாயிகளின் நலனை முன்னிறுத்தி, அவ்விவசாயிகளுக்காக இலவச மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வகுத்து, விவசாயிகளின் பாதுகாவலனாக இருந்தவரும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்தவருமான நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு 2023 சூன் 3ஆம் நாள் தொடங்கவுள்ளதையொட்டி;

"திராவிட மாடல்" ஆட்சியின் இரண்டாம் ஆண்டு சாதனைகளுக்குப் பாராட்டு!

நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை எழுச்சியுடன் கொண்டாடிட, இந்த தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் தீர்மானிக்கிறது.

கொரோனா பேரிடர் காலத்தில் பொறுப்பேற்று, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் தமிழர் நலன் மற்றும் தமிழ் நாடு மேம்பாடு இவற்றை மட்டுமே குறிக்கோளாக கொண்டு, கண் துஞ்சாது, மெய் வருத்தம் பாராது, தமிழ்நாட்டு நலனுக்காக அல்லும் பகலும் பாடுபட்டு, பார் போற்றும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி, "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" எனும் பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழியை தன்மொழியாக்கி, திட்டங்களை செயல்படுத்தி, ஓய்வறியா சூரியனாய் உழைத்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனைகளை இக்கூட்டம் பாராட்டி மகிழ்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.